DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 24.07.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.3/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.10 |
| Name | : | அருணாசலம் |
| Father Name | : | பெருஞ்சி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. P. Maruthachalam, Junior Assistant, of this court, on 24.07.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், வாழவந்தியில் குடியிருந்து கிளேஷ்புரூக் எஸ்டேட்டில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி கிளேஷ்புரூக் எஸ்டேட்டில் தான் வேலை செய்து வந்தார். கடந்த 10.03.2024-ம் தேதி வாட்ச்மேனாக பணிபுரிந்த ஆஜர் எதிரி மிளகு திருடியதாக கேள்விபட்டேன். மறுநாள் திங்கட்கிழமை காலை எஸ்டேட்டில் உள்ளவர்கள் ஆஜர் எதிரி மிளகு திருடியதாக சொன்னார்கள். அதன் பின்பு 14-ம் தேதி போலீசார் எஸ்டேட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த பார்வை மகஜரிலுள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. அதன்பின்பு எஸ்டேட்டிலிருந்து காப்பி 3 மூட்டைகள் மற்றும் 1 மூட்டை மிளகு போலீசார் கைப்பற்றினார்கள் அப்போது சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னுடன் சுப்பிரமணி என்பவரும் பார்வை மகஜரிலும், கைப்பற்றுதல் மகஜரிலும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இல்லை.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. R. Elanchezhian
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.